# Indian Economy Model Test Questions 12 in Tamil With Answer

1. கீழ்க்காணும் திட்டங்களில் எது வேலைவாய்ப்பு அதிகரிப்பதுடன் தொடர்புடையது?

   அ. சர்வ ஸ்வதிய அபியான்

   ஆ. சர்வ சிக்ஷா அபியான்

   **இ. ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் திட்டம்**

   ஈ. இந்திரா அவாஸ் திட்டம்

2. அட்டவணை 1ஐ அட்டவணை 2டோடு பொருத்தி உமது சரியான பதிலை கீழ்க்காணும் குறியீட்டுப் பகுதியில் தெரிவு செய்க.

| அட்டவணை 1 | அட்டவணை 2 |
|---|---|
| குழு | நோக்கம் |
| அ. தத் குழு | 1. தொழிற்சாலை அனுமதி |
| ஆ. வாஞ்சு குழு | 2. நேர்முக வரி |
| இ. ராஜமன்னார் குழு | 3. மத்திய-மாநில அரசுகள் |
| ஈ. ரங்கராஜன் குழு | 4. முதலைத் திரும்பப் பெறுதல் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 3 | 2 | 1 |
| ஆ. | 1 | 2 | 4 | 3 |
| **இ.** | **1** | **2** | **3** | **4** |
| ஈ. | 4 | 1 | 3 | 2 |

3. வரிசை 1உடன் வரிசை 2ஐப் பொருத்தி வரிசைகளுக்குக் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத்தெரிவு செய்க.

| வரிசை 1 | வரிசை 2 |
|---|---|
| அ. அசாரி அறிக்கை | 1. முறையற்ற வணிக நடவடிக்கை |
| ஆ. MRTP சட்டம் | 2. தொழில் உரிமம் |
| இ. சமதர்ம சமுதாய முறை | 3. வரி மற்றும் வரியில்லா வருவாய் |
| ஈ. பொதுநிதி கொள்கை | 4. பொதுத்துறை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ,** | **2** | **1** | **4** | **3** |
| ஆ. | 1 | 2 | 3 | 4 |
| இ. | 2 | 3 | 4 | 1 |

ஈ. 4 3 2 1

4. உணவு பாதுகாப்புச் சட்டம் 2013-ன் படி ஏழை எளியவர்களுக்குக் கிடையாது

**அ. வீடு ஒன்றுக்கு மாதம் தோறும் 35 கிலோ உணவு தானியம்**

ஆ. ஒருவருக்கு மாதம் தோறும் 35 கிலோ உணவு தானியம்

இ. ஒருவருக்கு நாள்தோறும் 3.5 கிலோ உனவு தானியம்

ஈ. ஒருவருக்கு ஆண்டு தோறும் 35 கிலோ உணவு தானியம்

5. தனிநபர் வருமான வரி விதிப்பது

அ. மாநில அரசு **ஆ. மத்திய அரசு**

இ. (அ) மற்றும் (ஆ) இரண்டும் ஈ. வட்டார அரசு

6. உலக முன்னேற்ற அறிக்கையின்படி இந்தியாவின் தனிநபர் மின் உபயோகம் எவ்வளவு?

**அ. ஜப்பானின் மின் உபயோகத்தில் 12%**

ஆ. அமெரிக்காவின் மின் உபயோகத்தில் 4%

இ. சைனாவின் மின் உபயோகத்தில் 2%

ஈ. ரஷ்யாவின் மின் உபயோகத்தில் 1%

7. கீழ்க்கண்ட குறியீட்டெண்ணுடன் வரிசை எண் 1 மற்றும் வரிசை எண் 2 னை சரியான விடைகளுடன் பொருத்துக.

| வரிசை 1 | வரிசை 2 |
|---|---|
| அ. P. K. பர்தன் | 1. வறுமை இடைவெளி |
| ஆ. தந்தேகர் & ராத் | 2. கிராமப்புற ஏழைகளின் ஆண்டு தனிநபர் நுகர்வு செலவினம் |
| இ. B.S. மின்ஹாஸ் | 3. விவசாய கூலி விலை குறியீட்டெண் |
| ஈ. கார்னர் டட் & மார்ட்டின் ரெவில்லியன் | 4. 2,250 கலோரிகள் குறைந்த அளவு ஊட்டச்சத்து அளவு |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 3 | 2 | 1 |
| **ஆ.** | **3** | **4** | **2** | **1** |
| இ. | 3 | 4 | 1 | 2 |
| ஈ. | 4 | 3 | 1 | 2 |

8. மக்கட்தொகை கணக்கெடுப்பு 2011-ன் படி வருவாய் ஈட்டும் வயது (15-59) வரம்பில் உள்ள தமிழக மக்களின் சதவீதம்

அ. 56 **ஆ. 66** இ. 76 ஈ. 86



winmeen.com

9. தனிநபர் தலா வருமானம் எப்பொழுது உயர்கிறது?

அ. மொத்த தேசிய உற்பத்தியும் மக்கள் தொகையும் ஒரே நேரத்தில் உயரும் போது

ஆ. மொத்த தேசிய உற்பத்தியும் மக்கள் தொகையும் குறையும் போது

**இ. மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பு மக்கள் தொகையை விட அதிகமாக அதிகரிக்கும் போது**

ஈ. மொத்த தேசிய உற்பத்தி மக்கள் தொகையை விட குறையும் போது

10. இந்தியாவில் எந்த துணை நிலை மாநிலம் (Union Territory) அதிக கல்வி கற்றோர் விகிதத்தைக் கொண்டிருக்கிறது?

அ. அந்தமாந்நிகோபர் தீவுகள் ஆ. பாண்டிச்சேரி

இ. டெல்லி **ஈ. லட்சத் தீவுகள்**

11. எந்த ஐந்தாண்டுத் திட்டம் காலத்தில் இந்தியாவின் முதன்மை வளர்ச்சிப் பொறுப்பு பொதுத்துறை நிறுவனங்களுக்கு மாற்றி வழங்கப்பட்டது?

அ. முதல் ஐந்தாண்டுத் திட்டம் **ஆ. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்**

இ. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் ஈ. நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்

12. 2011-12ஆம் ஆண்டில் இந்தியாவின் எந்த மாநிலத்தில் மிக அதிக மதிப்பில் அந்நிய நேரடி முதலீட்டின் முன்வடிவம் தாக்கல் செய்யப்பட்டது?

அ. தமிழ்நாடு ஆ. கேரளா

**இ. ஒடிசா** ஈ. பஞ்சாப்

13. குதிர் ஜோதி திட்டம் தொடர்புடையது

அ. விவசாயிகள்

ஆ. தொழிற்சல்லை பணியாளர்கள்

**இ. வீட்டுக்கு ஒரு புள்ளி மின்சார இணைப்பு வசதி ஏற்படுத்துதல்**

ஈ. தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்

14. கீழ்க்காணும் எந்த திட்டம் ஒவ்வொரு குடும்பமும் ஒரு வங்கி கணக்கு வைத்து இருக்க வேண்டும் என உறுதிபடுத்துகிறது?

**அ. பிரதான மந்திரி ஜான் தன் திட்டம்** ஆ. சான்சட் ஆதர்ஷ் கிராமிய திட்டம்

இ. ஸ்வாச் பாரத் மிஷன் அபியான் திட்டம் ஈ. ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

15. விவசாயத்துறையில் வேலையின்மையை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்

1. பருவகால வேலையின்மை 2. மறைமுக வேலையின்மை

3. நீடித்த வேலையின்மை சரியான பதிலை குறிப்பிடவும்.

அ. 1 மற்றும் 2 மட்டும் ஆ. 2 மட்டும் 3 மட்டும்

இ. 1 மற்றும் 3 மட்டும் **ஈ. 1, 2 மற்றும் 3**

16. காலியிடங்களை நிரப்புக:

குடும்பத்திற்கு _____ என்பதை ஊக்குவிக்கவும் மக்கள் தொகையை _______ம் ஆண்டில் நிலைப்படுத்தவும் 2000-ம் ஆண்டின் தேசிய மக்கள் தொகை கொள்கையில் ஏற்று கொள்ளப்பட்டது.

அ. இரண்டு குழந்தை திட்டம், 2020 ஆ. ஒரு குழந்தை திட்டம், 2030

**இ. இரண்டு குழந்தை திட்டம், 2046** ஈ. ஒரு குழந்தை திட்டம், 2050

17. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க.

அ. வரி வருவாய் 1. வருங்கால வைப்பு நிதி

ஆ. மூலதன வருவாய் 2. வருவாய் மற்றும் செலவு மீதான வரிகள்

இ. திட்டமில்லா செலவு 3. விற்பனை வரி

ஈ. மதிப்பு கூட்டிய வரி 4. வட்டி செலுத்துதல்கள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 3 | 2 | 1 |
| ஆ. | 1 | 3 | 4 | 2 |
| **இ.** | **2** | **1** | **4** | **3** |
| ஈ. | 2 | 3 | 4 | 1 |

18. இந்தியாவின் தேசிய புள்ளி விவர ஆணையம் இவரது தலைமையில் அமைந்திருந்தது

அ மன்செக் சிங் அலுவாலியா **ஆ. சி. ரெங்கராஜன்**

இ. ரகுராம் ராஜன் ஈ. வி.கே.ஆர்.வ்இ. ராவ்

19. இந்திய நிதி முறையின் கட்டமைப்பு இதனை உள்ளடக்கியது அல்ல

அ. தொழில் நிதி ஆ. வேளாண் நிதி

இ. வளர்ச்சி நிதி **ஈ. பற்றாக்குறை நிதி**

20. MGNREGS பிற ஏழ்மை நீக்கும் திட்டங்களிலிருந்து கீழ்க்கண்ட விதத்தில் வேறுபடுகிறது

1. MGNREGS குறிப்பிட்ட ஏழைகளின் வருவாயினை அதிகரிக்கும்
2. இது குடிமக்கள் மற்றும் அடிப்படை உரிமையை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது
3. தொடர்ந்த மற்றும் சமுதாய கண்காணிப்பதற்கான வழிமுறைகளை உறுதி செய்கிறது
4. மாநில மற்றும் மத்திய அரசுகளின் ஆணைகளுக்கிணங்க செயல்படுகிறது

அ. 1 மற்றும் 2 **ஆ. 2 மற்றும் 3** இ. 1 மற்றும் 4 ஈ. 2 மற்றும் 4

21. உச்சநீதிமன்றத்தால் இதை ஆராய்வதற்காக நீதியரசர் D. P. வாத்வா குழு அமைக்கப்பட்டது

அ. காப்பீட்டுத் திட்டங்கள்

ஆ. நாட்டின் கருப்புப் பணத்தின் அளவு

இ. கிராம வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகள்

**ஈ. பொது விநியோக முறை**

22. இந்தியாவில் உரங்களுக்கான ஊட்டச்சத்தின் அடிப்படையிலான மானியம் கொள்கை துவங்கிய ஆண்டு

அ. 1966 ஆ. 1977 இ. 1991 **ஈ. 2010**

23. பின்வருவனவற்றில் எவை சரியாக பொருந்தவில்லை? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி உங்கள் விடையை தேர்ந்தெடுக.

1. கடன் உருவாக்கம் - இந்தியான் ரிசர்வ் வங்கி
2. வணிக வங்கிகள் - வைப்புகளை ஏற்றுக் கொள்ளுதல்
3. இந்தியன் ரிசர்வ் வங்கி - கடன் கட்டுப்படுத்துதல்
4. எண்ணளவு கட்டுப்பாடு முறைகள் - பட்டியல் வங்கிகள்

**அ. 1 மட்டும்** ஆ. 1 மற்றும் 2 இ. 2 மற்றும் 4 ஈ. 1 மற்றும் 4

24. இந்தியாவில் விரைவான மக்கள் தொகை வளர்ச்சி ஏற்பட்டது இக்காலக் கட்டத்தில் ஆகும்.

அ. 1891-1921 ஆண்டுகளில் ஆ. 1921-1951 ஆண்டுகளில்

**இ. 1951 – 1981 ஆண்டுகளில்** ஈ. 1961-2001 ஆண்டுகளில்

25. 2010-11 ஆம் ஆண்டில் உலகளாவிய பால் உற்பத்தியில் இந்தியாவின் தரம் என்ன?

**அ. முதலிடம்** ஆ. இரண்டாமிடம்

இ. மூன்றாமிடம் ஈ. நான்காமிடம்

26. புதிய பொருளாதார கொள்கையில் பொதுத் துறையின் கீழ் எந்த தொழில் நிறுவனம் ஒதுக்கீடு செய்யப்பட்டது?

**அ. அணுமின் சக்தி** ஆ. பருத்தித் தொழில்

இ. சர்க்கரைத் தொழில் ஈ. தேயிலைத் தொழில்

27. வணிக சக்தி நுகர்வின் அடிப்படையில் கீழ்க்காணும் இந்திய துறைகளை இறங்கு வரிசையில் வரிசைப்படுத்துக.

1. இல்லறத்துறை 2. வேளாண்மை

3. தொழிற்சாலை 4. போக்குவரத்து

அ.4,3, 1, 2 ஆ. 3, 4, 1, 2 இ. 3, 4, 2, 1 ஈ. 4, 1, 3, 2

28. ஆகஸ்ட் 2015ல் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட 'இந்திரதனுஸ்' திட்டத்தின் நோக்கம்

அ. தனியார் துறை வங்கிகளை நிர்வகிக்க தனி அமைப்பை ஏற்படுத்துவது

**ஆ. பொதுத்துறை வங்கிகளை மேம்படுத்துசது அல்லது சீரமைப்பது**

இ. வங்கி சாரா நிதி நிறுவனங்களை மீட்டு சீரமைப்பது

ஈ. ஊரக இந்தியாவில் புதிய வங்கிகளை அறிமுகப்படுத்துவது

29. இந்திய திட்டக்குழுவின் தலைவர் யார்?

அ. இந்திய குடியரசுத் தலைவர் **ஆ. இந்திய பிரதம மந்திரி**

இ. இந்திய நிதி அமைச்சர் ஈ. இந்திய துணைக் குடியரசு தலைவர்

30. முதன்மைத் துறை இதை உள்ளடக்கியது

அ. வணிகம் ஆ. கட்டுமானம்

இ. தொலை தொடர்பு **ஈ. விவசாயம்**

31. முதல் மக்கள் தொகை ஆராய்ச்சியாளர் யார்?

**அ. T. R. மால்தஸ்** ஆ. ஆதம் ஸ்மித்

இ. J.S. மில் ஈ. கார்ல் மார்க்ஸ்

32. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

துணிபு(A): பத்தாவது ஐந்தாவது திட்டத்தின் காலம் 2002-2007 து-தே-யு

காரணம்(R): வறுமை மற்றும் மக்கள் தொகை வளர்சியை குறைத்தலுக்கு முன்னுரிமை

அ. (A) சரி ஆனால் (R) என்பது தவறு

ஆ. (A) தவறு ஆனால் (A) என்பது சரி

**இ. (A) மற்றும் (R) இரண்டும் சரி. (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஈ. (A) மற்றும் (R) இரண்டும் சரி. (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

33. குறுவிவசாயி என்பவர்

**அ. 1.25 ஏக்கர் நஞ்சை (அ) 2.5 ஏக்கர் புஞ்சை (அ) அதற்கும் குறைவாக விவசாயம் செய்கிறவர்**

ஆ. 2.5 ஏக்கர் நஞ்சை (அ) 5 ஏக்கர் புஞ்சை (அ) அதற்கும் குறைவாக விவசாயம் எய்கிறவர்

இ. 2.5 ஏக்கர் புஞ்சை (அ) 5 ஏக்கர் நஞ்சை (அ)அதற்கும் குறைவாக விவசாயம் செய்கிறவர்

ஈ. 1.25 ஏக்கர் புஞ்சை (அ) 2.5 ஏக்கர் நஞ்சை (அ) அதற்கும் குறைவாக விவசாயம் செய்கிறவர்

34. கீழ்க்கண்ட கருத்துகளில் தவறானதைச் சுட்டிக் காண்பிக்கவும்:

கருத்துகள்

**அ. ஆதரவற்ற விதவைச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது**

ஆ. கிராம பஞ்சாயத்துகளின் பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவாளராக கிராம நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

இ. வாரிசுச் சான்றிதழ் வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது

ஈ. வருமானச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது

35. இயற்கைவாதிகள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது

அ. உற்பத்தித் தொழில் **ஆ. வேளாண்மை**

இ. சேவைத் துறை ஈ. படை வீரர்கள்

winmeen.com

36. நிகர நாட்டு உற்பத்திக்கும் (NNP) நிகர உள்நாட்டு உற்பத்திக்கும் (NDP) இடையே உள்ள வேறுபாடானது

அ. தேய்மானம்

ஆ. உலகின் பிற பகுதிகளிலிருந்து நடப்பு மாற்றம்

இ. மறைமுக வரி

**ஈ. வெளிநாடுகளிலிருந்து வரும் நிகரக் காரணி வருவாய்**

37. ______ திட்டம் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் போன்ற திட்டங்கள் வழியாகப் பெண்களின் அதிகாரக் குவிப்பு மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகாட்டுகிறது

அ. குறுகிய கால இல்லங்கள் ஆ. குடும்ப ஆலோசனை மையம்

**இ. சுயம்ஸிதா** ஈ. திறன் மேம்பாடு

38. மாநிலத்தில் உள்ள வருவாய் நீதிமன்றம் கீழ்க்காணும் எந்த வழக்குகள் தொடர்புடையது?

அ. பட்டா மாறுதல் மேல்முறையீடு வழக்குகள்

**ஆ. குடிவார உரிமைச் சட்ட வழக்குகள்**

இ. முத்திரைத்தாள் கட்டணம் வழக்குகள்

ஈ. “நில உடமை மேம்பாடு திட்டம்” திருத்தம் வழக்குகள்

39. கிராம கணக்கு எண் 1 என்பது

**அ. சாகுபடி கணக்கு** ஆ. அடங்கல்

இ. குத்தகை பதிவேடு ஈ. இனாம் பதிவேடு

40. எந்த ஒரு வட்டத்திற்கும் வருவாய் தீர்வாயம் நடத்தும் அலுவலர்களாக யார் இருப்பர்?

அ. துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர்

ஆ.வட்டாட்சியர், தனி வட்டாட்சியர் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர்

இ. துணை வட்டாட்சியர் மற்றும் தனி வட்டாட்சியர்

**ஈ. துணை ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சி தலைவர்**

41. எத்தனை வகையான நஞ்சை நிலங்கள் உள்ளன?

**அ. 3** ஆ. 4 இ. 5 ஈ. 6

42. கிராம நிர்வாக அலுவலரால் ‘B’ நமுனாவில் பதியப்படுவது யாது?

**அ. ஆக்ரமணம் (அ) ஆக்கிரமிப்பு** ஆ. பட்டா மாறுதல்

இ. சிட்டா ஈ. 2C பட்டா

43. கீழ்க்காண்பனவற்றுள் மிக முக்கியமான வேளாண்மையே அடிப்படையாகக் கொண்ட தொழில்

அ. இரும்பு எஃகு ஆ. சிமெண்ட்

**இ. சர்க்கரை** ஈ. சணல்

44. கீழ்வருவனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க.

அ. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு பணிகள் 1. 2002

ஆ. தேசிய ஊரக சுகாதாரப் பணித்திட்டம் 2. 1975

இ. தேசிய சுகாதாரக்கொள்கை 3. 1988

ஈ. தேசிய கல்விக் கொள்கை 4. 2005

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 1 | 4 | 2 |
| **ஆ.** | **2** | **4** | **1** | **3** |
| இ. | 3 | 2 | 4 | 1 |
| ஈ. | 1 | 3 | 2 | 4 |

45. கீழ்வருவனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க.

அ. நிர்மல் பாரத் அபியான் 1. ஊரக சாலைகள்

ஆ. பிரதான் மந்திரி கிராம சதக்யோஜனா 2. அனைத்து வாழ்விடங்களுக்கும் அடிப்படை கட்டமைப்பு வசதி செய்து தருதல்

இ. கிராம கட்டமைப்பு திட்டம் 3. கிராம சுகாதாரம்

ஈ. தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் 4. மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டத்தில் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துதல்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **3** | **1** | **4** | **2** |
| ஆ. | 1 | 3 | 2 | 4 |
| இ. | 4 | 1 | 3 | 2 |
| ஈ. | 2 | 4 | 1 | 3 |

46. பின்வரும் நிதி ஆணையங்களில், மத்திய அரசின் அனைத்து வரிகளின் நிகர வருமானத்தினை மாநிலங்களுக்கு அதிகார பகிர்வு வழங்க பரிந்துரை செய்த ஆணையம் எது?

அ. 8வது நிதி ஆணையம் **ஆ. 11வது நிதி ஆணையம்**

இ. 10வது நிதி ஆணையம் ஈ. 9வது நிதி ஆணையம்

47. 1868 ஆம் ஆண்டில், இந்தியாவின் தேசிய வருவாய் மதிப்பீட்டுக் குழுவினைத் தலைமை தாங்கியவர்

அ. V.K.R.V. ராவ் ஆ. ஷா மற்றும் கம்பட் ஆவார்

**இ. தாதாபாய் நௌரோஜி ஆவார்** ஈ. W.C. பீட்டர்கள் ஆவார்

48. இந்த உற்பத்தி மேம்பாட்டு திறனை வெளிக்கொணர, பாரத நிர்மான் திட்டம் தொடங்கப்பட்டது?

அ. இந்திய பத்திர சந்தை

ஆ. பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்பேற்புப் பணி

இ. நகர்புற இந்தியா

**ஈ. கிராமப்புற இந்தியா**

49. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் எப்போது முதல் ஆதார் அட்டையை உருவாக்கியது?

அ. ஆகஸ்ட் 29, 2009 ஆ. செப்டம்பர் 26, 2011

**இ. செப்டம்பர் 29, 2010** ஈ. அக்டோபர் 25, 2010

50. கீழ்வருவதில் எந்த ஒன்று, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச அடிப்படை சேவைகள் (BMS) திட்டத்தில் இடம் பெறவில்லை?

அ. அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல்

ஆ. ஆரம்பக் கல்வி அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்

**இ. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை வளர்ச்சியடையச் செய்தல்**

ஈ. ஆரம்பச் சுகாதார வசதிகள் கிட்டுமாற் செய்தல்

51. சம அளவு வருமான பகிர்வை காட்டும் புள்ளியியல் குறியீடு

அ. தேசிய வருமானம் ஆ. தலா வருமானம்

**இ. கினி கெழு** ஈ. செலவிடத்தக்க தனிநபர் வருமானம்

52. இந்தியாவில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பிரயோகிக்கப்பட்ட ஊட்டச்சத்து திட்டமானது இந்த அமைப்பின் உதவியுடன் தொடங்கப்பட்டது

அ. UNO ஆ. WHO **இ. UNICEF** ஈ. CARE

53. எந்த மாநிலங்களில், மாநிலங்களுக்கு இடையேயான வறுமை விகிதாசார வேறுபாடு அதிகளவில் உள்ளது?

**அ. பீகார், ஒரிசா, மத்தியப்பிரதேசம்** ஆ. கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு

இ. பஞ்சாப், ஹரியானா, குஜராத் ஈ. பீகார், தமிழ்நாடு, குஜராத்

54. எந்த வகை வேலையின்மை, இந்திய வேளாண்மையில் பரவலாக உள்ளது?

அ. அமைப்புச் சார்ந்த வேலையின்மை **ஆ. பருவ காலம் சார்ந்த வேலையின்மை**

இ. சுழற்சி சார்ந்த வேலையின்மை ஈ. தொழில்நுட்பம் சார்ந்த வேலையின்மை

55. இந்தியாவில் வேலைவாய்ப்பின்மைக்கு இது காரணம் அல்ல

அ. மக்கள்தொகை பெருக்கம்

ஆ, தேவைக்கு குறைவான வேலைவாய்ப்பு திட்டமிடல்

**இ. தொழிலில் துரித முன்னேற்றம்**

ஈ. மனிதவளத் திட்டத்தில் குறைபாடு

56. இந்தியாவில் தேசிய வருமானம் யாரால் கணக்கிடப்படுகிறது?

அ. திட்டக்குழு ஆ. நிதிக்குழு

இ. இந்திய புள்ளியியல் நிறுவனம் **ஈ. மத்திய புள்ளியியல் அமைப்பு**

57. கீழ்க்கண்டவற்றில் அமைப்புசாரா பெண் தொழிலாளர்களின் பிரச்சனை எது?

அ, சம ஊதியம்

ஆ. குறிப்பிட்ட மணியளவில் வேலை

**இ. தொழில்(வேலை) வித்தியாசங் கண்டறிதல்**

ஈ. பொருளாதார சுதந்திரம்

58. 2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, இந்திய மொத்த மக்கட்தொகையில் எத்தனை சதவீதம் பேர் மாற்றுத் திறனாளிகள்?

அ. 2.01 **ஆ. 2.21** இ. 2.51 ஈ. 2.71

59. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட முன்னால் எந்தப் பெயரில் அமைக்கப்பட்டது?

அ. அந்தோதயா திட்டம்

ஆ. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம்

இ. ஊரக இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டம்

**ஈ. உணவிற்கான வேலைவாய்ப்புத் திட்டம்**

60. கீழ்க்காணும் வாக்கியங்களை கவனி:

கூற்று(A): பல்வேறு வணிக/ வியாபார நிறுவனங்கள் தங்களின் இலாபத்தை அதிகப்படுத்துவதற்காக குழந்தைகளை பணியில் அமர்த்துகின்றனர்.

காரணம்(R): குழந்தைகள் பணியில் அமர்த்துவதன் மூலம் குழந்தைகள் பொருளாதார ரீதியாக சுரண்டப்படுகின்றார்கள்.

**அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி. (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி. (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) சரி

61. பெரிய அளவிலான வறுமைக்கான காரணம்

அ. மிதமான பொருளாதார வளர்ச்சி

ஆ. மிதமான விவசாய செயல்

**இ. வளர்ச்சி துறைகளில் காணப்படும் மெதுவான வேலைவாய்ப்புகள்**

ஈ. பணவீக்க குறைவு மற்றும் உணவு சாராத விலைகள்

62. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டமாகும்?

winmeen.com

அ. IADP ஆ. IAAP இ. HYVP **ஈ. IRDP**

63. கீழ்க்காணும் வாக்கியங்களை கவனி:

கூற்று(A): இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வேலையில்லாதவர்கள் சமமாக பரவியிருக்கவில்லை

காரணம்(R): வேலைவாய்ப்பு வளர்ச்சி ஒரு ஆண்டிற்கு இரண்டு சதவீதம் மட்டும் உள்ளது.

அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி. (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

**ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி. (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல**

இ. (A)சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) சரி

64. பொருத்துக,.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. ஆடம் ஸ்மித் | 1. வறுமைக்கோடு |
| ஆ. பட்டினிக்கோடு | 2. ஒப்புமை வறுமை |
| இ. இந்திய தேசிய திட்டக்குழு | 3. தேசங்களின் செல்வம் |
| ஈ. வாழ்வதற்கு அத்தியாவசியமான பொருட்களில்லா வறுமை | 4. உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் முதல் பொதுச் செயலர் |
| | 5. பூர்ணமான/ உண்மையான வறுமை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 2 | 1 |
| ஆ. | 4 | 3 | 2 | 1 |
| **இ.** | **3** | **4** | **1** | **5** |
| ஈ. | 4 | 3 | 2 | 5 |

65. ஆசிய பசிபிக் பொருளாதார சர்வதேச கூட்டமைப்பின் 27வது சந்திப்பு எந்த நாட்டில் நடைபெற உள்ளது?

**அ, பிலிப்பைன்ஸ்** ஆ. பீஜிங்

இ. மெக்சிகோ ஈ. மலேசியா

66. இந்தியாவில் அதிக காப்பி பயிரிடும் மாநிலம்

**அ. கர்நாடகம்** ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா ஈ. தமிழ்நாடு

67. பணவீக்கம் அதிகரிப்பதற்கான காரணம் அதிக

**அ. பண அளிப்பு** ஆ. உற்பத்தி

இ. மக்கள் தொகை ஈ. வேலைவாய்ப்பு

68. பிரதான் மந்திரி கிராம சடக்(சாலை) யோஜனாவின் கீழ் வரும் திட்டம் எது?

அ. குடிநீர் இணைப்பு **ஆ. சாலை இணைப்பு**

இ. சமையல் எரிவாயு இணைப்பு ஈ. மின்சாரம் இணைப்பு

69. உலக வர்த்தக மையத்தின் (WTO) 2013ஆம் ஆண்டிற்கான தர வரிசை மதிப்பீட்டின்படி, உலக வணிகச் சரக்கு வர்த்தகத்தில் இந்தியா, பெரும் அளவிலான ஏற்றுமதி மற்றும் இறக்கு மதியாளராக உள்ள நிலைகள் முறையே

அ. 12வது, 19வது ஆகும் **ஆ. 19வது, 12வது ஆகும்**

இ. 8வது, 10வது ஆகும் ஈ. 10வது, 8வது ஆகும்

70. இந்தியாவின் மக்கள்தொகை பெருக்கத்தில் எந்த ஆண்டு மிகப்பெரிய பிளவு (the year of great divide) என அழைக்கப்படுகிறது?

அ. 1931 **ஆ. 1921** இ. 1881 ஈ. 2011

71. இந்தியாவின் பதினான்காம் நிதிக்குழுவின் தலைவர் இவர்

அ. சி. ரெங்கராஜன் ஆ. எ.எம். குஸ்ரோ

இ. ஒய்.பி. சவான் **ஈ. ஒய்.வி. ரெட்டி**

72. பசுமை புரட்சி என்பது

அ. காடுகளை உருவாக்குவது

**ஆ. வீரிய வித்துகள், இராசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள், இயந்திரங்களை பயன்படுத்துவது**

இ. சுற்றுப்புறச்சூழலை பசுமையாக்குவது

ஈ. அதிக அளவில் செடிகளை நடுவது

73. கீழ்க்கண்டவற்றுள் கூலியில்லா வேலை வாய்ப்புத் திட்டத்தினை அடையாளம் காட்டுக.

அ. ஜவகர் ரோஜர் யோஜனா

**ஆ. இந்திர அவாஸ் யோஜனா**

இ. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்

ஈ. TRYSEM

74. இது இந்தியாவின் முதல் பசுமை நில (green field) சிறப்புப் பொருளாதார மண்டலம்

அ. SEZ Bhadhon ஆ. SEZ Vishakapatinam

**இ. SEZ Indora** ஈ. SEZ Noida

75. வேளாண் முன்னேற்றத்திற்கான பன்னாட்டு நிதியின் ஆட்சிக் குழு தலைவர் யார்?

அ. ராகுல்வர்மா **ஆ. தினேஷ் சர்மா**

இ. தத் ஈ. மிதுன் வர்மா

76. இந்தியாவில் மருந்து கம்பெனிக்கு எவ்வளவு சதவிகிதம் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது?

**அ. 100%** ஆ. 51% இ. 60% ஈ. 48%

77. ரங்கராஜன் குழு எவற்றுடன் தொடர்புடையது?

அ. வங்கி சீர்திருத்தம்

ஆ. பங்கு சந்தை சீர்திருத்தம்

**இ. பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டை குறைத்தல்**

ஈ, தொழில் அனுமதி

78. இவற்றில் நாகாவது துறை என எது அழைக்கப்படுகின்றது?

அ. விவசாயத்துறை **ஆ. தகவல் துறை**

இ. தொழில் துறை ஈ. சேவை துறை

79. சில மாநிலங்கள் முன்பு அதிக வளர்ச்சி மற்றும் அதிக வருமானம் கொண்டதாக இருந்தன. ஆனால் 11வது திட்ட காலத்தில் அதன் வளர்ச்சி குறைந்துள்ளன. அவர்கள்

அ. கர்நாடகா மற்றும் கேரளா ஆ. தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம்

இ. ஆந்திர பிரதேசம் **ஈ. கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு**

80. யாருடைய பரிந்துரையின் அடிப்படையில் ரிசர்வ் வங்கியின் ஊரகக் கடன்கள் அனைத்தும் நபார்ட் வங்கிக்கு மாற்றப்பட்டது?

**அ. கிராபிக்காட் (CARFICARD)** ஆ. நாரிமன் (NARIMANN)

இ. ஸீலிகள் (SCHELEGAL) ஈ. பென்ச்மென் (BENCH MANN)

81. சர்வதேச இயற்கை பேரிடர் குறைத்தலுக்கான பத்தாண்டு திட்டம் அறிவிக்கப்பட்ட பத்தாண்டு ______ ஆகும்.

அ. 1980-1990 **ஆ. 1990- 2000** இ. 2000-2010 ஈ. 2010-2020

82. IUCN சிவப்பு புத்தகம் புள்ளி விவரம் 2004 படி, எத்தனை வகையான மரங்கள் இந்தியாவில் அழிந்துள்ளன?

**அ. 87** ஆ. 89 இ. 97 ஈ. 99

83. உலகில் தற்பொழுது அதிக சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாக எது தோன்றியுள்ளது?

அ. ருஷ்யா ஆ. அமெரிக்கா

**இ. இந்தியா** ஈ. பிரேசில்

84. “மக்களின் வாழ்க்கை தரத்தை அதிகமாக உயர்த்துவது தான் அடிப்படை நோக்கம்” மற்றும் மேலும் “இவை சாதாரண பொது மக்கள், பலவீனமான வகுப்பினர் மற்றும் முன்னுரிமை அளிக்கப்படாத மக்களுக்கானது என வலியுறுத்தியது”

இவை எந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

அ. முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆ. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

**இ. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்** ஈ. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம்

85. முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களில் எதன் ஒன்றை நிறுவுவது என பேசப்பட்டன?

அ. கலப்பு பொருளாதார முறை

**ஆ. சமதர்ம சமுதாயத்தை நிறுவுவது**

இ. சமூக மற்றும் பொருளாதார மக்களாட்சியை நிறுவுவது

ஈ. (ஆ) மற்றும் (இ) இரண்டும்

86. இந்தியாவில் 2001-11 கால கட்டத்தில் மக்கள் தொகை சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம்

அ. 1.31% ஆ. 1.93% **இ. 1.61%** ஈ. 2.1%

87. பின்வருபவனுள் எது மக்கள் தொகையை தீர்மானிக்கும் காரணி அல்ல?

அ. பிறப்பு வீதம் ஆ.இறப்பு வீதம்

இ. இடப்பெயர்ச்சி **ஈ. வறுமை**

88. பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா என்ற திட்டம் எப்போது துவங்கப்பட்டது?

அ. ஜுலை 9, 2014 ஆ. ஜுன் 6, 2014

**இ. மே 9, 2015** ஈ. ஆகஸ்ட் 2, 2015

89. “HRIDAY” என்ற சொல் எதைக் குறிக்கிறது?

**அ. நகர மேம்பாடு** ஆ. விவசாய மேம்பாடு

இ. கல்வி மேம்பாடு ஈ. வறுமை ஒழிப்பு

90. இவற்றில் எந்த எரிசக்தி இலவசமானது மற்றும் விலை ஆதிக்கம் இல்லாதது என்று கருதப்படுகிறது?

அ. வணிக எரிசக்தி **ஆ. வணிகமல்லாத எரிசக்தி**

இ. (அ) மற்றும் (ஆ) இரண்டும் ஈ. நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி

91. மத்திய அரசு அண்மையில் GST யை இந்தியாவில் நடைமுறைப்படுத்த முடிவெடுத்துள்ளது. GST என்பதன் விரிவாக்கம் என்ன?

**அ. பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி**

ஆ பொது விற்பனை வரி

இ. பொது சேவைகள் வரி

ஈ. பண்டங்கள் விற்பனைகள் வரி

92. அண்மையில் ரிசர்வ் வங்கி யாருடைய தலைமையின் கீழ் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை ஆராய ஒரு உயர்மட்டக் குழுவை அமர்த்தியது?

அ. சி. ரங்கராஜன் ஆ. மஷ்வந்த் சின்கா

இ. ரகுராம் ராஜன் **ஈ. ஆர். காந்தி**

93. பசுமைப் புரட்சியால் குறைப்பாக இவ்வகை உணவு உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டது

**அ. அரிசி, கோதுமை** ஆ. கோதுமை, எண்ணெய் வித்துக்கள்

இ. அரிசி, மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஈ. அரிசி, கரும்பு

94. பட்டியல் 1ஐ பட்டியல் 2 உடன் சரியாகப் பொருத்தி கீழ்க்குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. நிலத்தின் இயல்பு | 1. இடர்பாடுகளை ஏற்றல் |
| ஆ. உழைப்பின் இயல்பு | 2. ஆக்கமுடையது |
| இ. மூலதனத்தின் இயல்பு | 3. இடம்பெயரக் கூடியது |
| ஈ. தொழிலமைப்பின் இயல்பு | 4. அளிப்பு நிலையானது |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ, | 4 | 1 | 2 | 3 |
| ஆ. | 1 | 3 | 2 | 4 |
| **இ.** | **4** | **3** | **2** | **1** |
| ஈ. | 2 | 4 | 3 | 1 |

95. தாய்த் தொழில் என அழைக்கப்படும் தொழில்

அ. நெசவுத் தொழில் ஆ. பருத்தித் தொழில்

**இ. இரும்பு எஃகுத் தொழில்** ஈ. சர்க்கரைத் தொழில்

96. வேளாண்மை உற்பத்தி என்பது

அ. நாட்டின் மொத்த வேளாண் உற்பத்தி

**ஆ. உள்ளீடு, வெளியீட்டுக்கும் உள்ல விகிதம்**

இ. அனைத்து உள்ளீடு, வெளியீடுகளின் கூடுதல்

ஈ. அனைத்து மாநில, யூனியன் பிரதேசங்களின் மொத்த உற்பத்தி

97. ஏழ்மை என்பது

அ. போதுமான சேமிப்பின்மை ஆ. போதுமான கல்வியின்மை

இ. போதுமான உடல்நலமின்மை **ஈ. போதுமான வருமானமின்மை**

98. ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002இல் ஜோகனேஸ் பர்க்கில் நடந்தது. இதன் நோக்கம்

அ. மென்பொருள் மேம்பாடு ஆ. போக்குவரத்து மேம்பாடு

இ. சமூக மேம்பாடு **ஈ. பேணத் தகுந்த மேம்பாடு**

99. இந்திய வானொலி சேவை எப்பொழுது தொடங்கப்பட்டது?

**அ. 1927** ஆ. 1937 இ. 1947 ஈ. 1827

100. உலகமயமாக்கப்படல் எதனை அறிவுறுத்துகிறது?

**அ. பொருளாதார ஒருங்கிணைப்பு** ஆ. அரசியல் ஒருங்கிணைப்பு

இ. சமூக ஒருங்கிணைப்பு ஈ. இவை அனைத்தும்

winmeen.com